K.N. Sundaram Chettiar, N.C. Puram

இந்துகலாபிவிருத்திச் சங்க இலவச வெளியீடு 6

அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச்செய்த

கதிர்காமத் திருப்புகழ்.




இந்துகலாபி விருத்திச் சங்கம்,

ஜிந்தும்பிட்டித் தெரு,

கொழும்பு

தாது ௵ ஆடி ௴



சுப்பிரமணியக்கடவுள் அருணகிரிநாதருக்கு
உபதேசித்தல்.

அருணகிரிநாத சுவாமிகள்
அருளிச் செய்த
கதிர்காமத் திருப்புகழ்.

சைவாபிமானச் செல்வர்களின்
பொருளுதவியைக்கொண்டு
பிரசுரிக்கப்பெற்றது.

இந்துகலாபிவிருத்திச்சங்கம்,
ஜிந்துப்பிட்டித் தெரு.
கொழும்பு.

தாது ஹூ ஆடி மீ



சுப்பிரமணியக் கடவுள்.

உ

சிவமயம்

அருணகிரிநாதசுவாமிகள் அருளிச்செய்த

கதிர்காமத் திருப்புகழ்.

க தனதனன தான தனதனன தான
தனதனன தான தானத் தனதான.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக ருமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

உ தனன தான தானன தனன தானன
தனன தான தானன தனதான

அலகின் மாறு மாருத கலதி பூத வேதாளி
அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணாது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகி
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு வெனயாதும்
பரிவு றாத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்


இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலை மாருத திறல்வீரா
இமய மாது பாகரே திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதிட வடவை யாறு சூழ்சீத
கதிர் காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேருவே தேவர் பெருமாளே

௩. தனன தான தத்த தனதான தனன தான தத்த தனதான.

எதிரி லாத பத்தி தனைமேவி இனியதாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்குள்ளு றவாகி எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர் காம வெற்பி லுறைவோனே கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே வழுதி கூனி மிர்த்த பெருமாளே

௪ தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான

கடகட வருவிகள் தபவரி யதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நககுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோடே
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே
இடமொரு மாகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.



பழனியாண்டவர்

5

தனனதன தானத்த தனனதன தான
தனனதன தானத்த தனதான தானனு

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலு லாவியே
சரியைகிரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ருருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை யெனுமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்கிரு பாசித்தம் அருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யநுபவைப ராசத்தி
யெழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்தபிர தாபிக்கு
மதிகவித சாமர்த்திய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபி ராமனே.

6

தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றான் இருகூறுச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய் வலக்கா ரமுற்றாய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது

பொறுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்

கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனுரைக்

கரிக்கோ லவிட்டார் கனுக்கா னமுத்தே
கதிர்க்கா மமுற்றூர் முருகோனே.

7

தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய

சமயபே தத்தினுக் கனுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான

துரியமேல ற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு

துகளில்சா யுச்சியக் கதியையீ றற்சொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனே

புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்

புளவேல் தொட்டகைக் குமரன்மேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே

கரியையூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்

கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிர்காம மக்கிரிப் பெருமாளே.

8

தானதன தத்தத்த தானதன தத்தத்த
தானதன தத்தத்த தனதான.

பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே

பாகளவு தித்தத்த கிதமொழி யிற்புட்ப
　　பாணவிழு யிற்பொத்தி விடுமாதர்
காரணிகு ழற்கற்றை மேல்மகர மொப்பித்த
　　காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகன கப்பட்ட வாசையைம றப்பித்த
　　கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி யுட்கிப்பு காமுதுபு ரத்திற்றெ
　　சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
　　கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
　　மேகலையி டைக்கொத்தின் இருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
　　வேல்களில கப்பட்ட பெருமாளே.

9

தனதன தத்த தனதன தத்த
தனதன தத்த தனதான

மருவரு வெற்றி மலர்தொடா விற்கை
　　வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
　　மதிசுடா நிற்கு மதனாலும்
இருகனல் முத்த முதிரயா மத்தி
　　னிரவினல் நித்த மெலியாதே
இடருரு மெத்த மயல்கொளா நிற்கு
　　மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
　　கலவிகூர் சித்ர மணிமார்பா
கனகமா ணிக்க வடிவனே மிக்க
　　கதிர்கா மத்தில் உறைவோனே
மருகனே பத்த ரருகனே முத்தி
　　முதல்வனே பச்சை மயில்வீரா

முகிடுமே விட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே

10 தானதன தானத் தனதான தானதன தானத் தனதான

மாதர்வச மாயுற் றுழல்வாரும் மாதவமெ ணுமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும் தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசிலா நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமாளே.

11 தனன தான தான தத்த தனன தான தான தத்த
தனன தான தான தத்த தனதான

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கில் எரியு மால மார்பி டத்து
முழுகி யேறி மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக நீடி சைக்கும்
விவிவி டாத தாய ருக்கு மழியாதே
விளையு மோக போக முற்றி அளவி லாத காதல் பெற்ற
விசட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர் காம மாநகர்க்கு ளேதிரி லாத வேல்தரித்த
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னத்தி களப மார்ப யோத ரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை யருள்வோனே
அகில லோக மீது சுற்றி யசுரர் லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே

ஸ்டான்லி பிரஸ், கொழும்பு.



முருகக்கடவுள்.

ஸ்தோத்திரத்திரட்டு.

புதிய பதிப்பு.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், திருமந்திரம், பதினோராந்திருமுறை, திருமொழி, கந்தரலங்காரம், பட்டிணத்தார் பாடல், இராமலிங்கசுவாமி பாடல் முதலியவற்றினின்றும் திரட்டிய அரிய தோத்திரப்பாக்களும், விநாயக ரகவல், விநாயக கவசம், கந்தர்சஷ்டி கவசம், திருவெம்பாவை, திருப்பொற் சுண்ணம் முழுவதும்,

சுருக்கமான ஆலயதரிசன விதியும் அடங்கியுள்ளது.

அழகிய படங்களுடன்

நேர்த்தியான பைன்ட் செய்யப்பெற்றது.

விலை சதம் 30.

இந்துகலாபி விருத்திச்சங்கம்,
ஜிந்தும்பிட்டித் தெரு,
கொழும்பு.

ஸ்டான்லி பிரஸ், கொழும்பு.